Registered as a Newspaper

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை: ரூ. 1-25

கேக் தயாரிப்புக்கேற்ற
தரமான பொருட்களுக்கு
நாடுங்கள்
பெட்டா
எ ச ன் ஸ்
சப்பிளேயர்ஸ்
333, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்.

வந்துவிட்டது!
தரமான சுவையுள்ள
(f)புள் கிறீம் (full cream)
மில்க் பவுடர்
பெட்டா
எசென்ஸ்
சப்பிளேயர்ஸ்
333, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஸூ ஆடி மீ 1 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஃ பிறை 20 (17 – 07 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 199

### மலர்க்கிரீடம்

ஜனதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற ஆர். வெங்கட்ராமன் நேற்று மலர்க்கிரீடம் சூட்டி கௌரவிக்கப்பட்டார்.

தமிழகப் பிரதிநிதிகள் அவருக்கு மலர்க்கிரீடம் மற்றும் ஆளுயர மலர் மாலை அணிவித்துக் கௌரவித்தனர்.

தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனும் ஆர். வெங்கட்ராமனுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கின்றார்.

# இந்திய உயர் பதவியில் தமிழர்
# வெங்கட்ராமன் ஜனதிபதியானர்

## இலங்கைப் பிரச்சினையின்
## அணுகுமுறையில் உத்வேகம் வரும்

புதுடில்லி, ஜுலை 17

தமிழரான ஆர். வெங்கட்ராமன் இந்தியாவின் எட்டாவது ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

தமிழர் ஒருவர் இந்தியாவின் அதிஉயர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

தமிழ் நாடு, பட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. வெங்கட்ராமன் உலகத்தின் மூன்றுவது சக்தி மிக்க நாடான இந்திய உப கண்டத்தின் உயர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பது உலகம் முழுவதும் வாழும் தமிழர்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

ஜனநாயக மரபில் வந்தவரும், காந்திய இலட்சியங்களில் ஈடுபாடு உடையவருமான திரு. வெங்கட்ராமனின் தெரிவு உள் நாட்டில் உயர்மட்டத்தில் ஏற்படவிருந்த பல பூசல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

இலங்கை இனப்பிரச்சினை சூடு பிடித்திருக்கும் இந்தவேளையில் தமிழர் ஒருவர் இந்தியாவின் அதி உயர்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது புதிய ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் என்று அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கிறார்கள்.


ஆர். வெங்கட்ராமனின் தெரிவினல், இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் அணுகுமுறை உத்வேகம் அடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

76 வயதான திரு. வெங்கட்ராமன் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட எதிர்க்கட்சி வேட்பாளரான 71வயது நிரம்பிய முன்னுள் நீதியரசர் வி. ஆர். கிருஷ்ண ஐயரைவிட 4 லட்சத்து 58 ஆயிரத்து 598 வாக்குகள் பெற்று பெரு வெற்றியீட்டினர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)



வெங்கட்ராமன்



கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஹெலித் தாக்குதலில் சேதமுற்ற சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலயத்தின் தோற்றம்.
(படம்:- வடமராட்சிச் செய்தியாளர்)

### இன்று ஆடிப்பிறப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 17

இன்று ஆடிப்பிறப்பு. சைவ மக்களால் கொண்டாடப்படும் விசேஷ தினமான இன்று சூரியபகவான் தெட்சணயனத்தில் பிரவேசிக்கின்றார்.

### தங்களுக்குள் சுடுபட்டுக்கொண்ட சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், ஜுலை 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது சிப்பாய்கள் தவறுதலாக தங்களுக்குள் சுட்டுக் கொண்டதால் ஒரு சிப்பாய் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

முள்ளியவளைக் காட்டுப் பகுதியில் கடந்த புதன் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின்போதே இச் சம்பவம் இடம் பெற்றதாம். (உ–எ)

நீண்டகால முயற்சியின் பின்

## முல்லைத்தீவில் அவ்ரோ இறங்கியது

யாழ்ப்பாணம், ஜுலை 17

நீண்டகால முயற்சியின் பின் முல்லைத்தீவில் பாதுகாப்புப் படையினர் நிறுவிய விமான ஓடு பாதையில் கடந்த புதன் கிழமை காலை அவ்ரோ விமானம் ஒன்று பரீட்சார்த்தமாக வந்திறங்கியது.

அவ்ரோ விமானம் முல்லைத்தீவு பகுதியில் வந்திறங்கியது இதுவே முதல் தடவை என்று சொல்லப்படுகின்றது.

ஓடுபாதையில் இறங்குமுன்னர், நீண்ட நேரம் வானில் விமானம் வட்டமிட்டது.

சிறிது நேரத்தில் விமானம் மீண்டும் புறப்பட்டுச் சென்றது.

முன்னர் ஒருமுறை விமான ஓடுபாதை செப்பனிடப்பட்டு, முதல் தடவையாக அவ்ரோ விமானம் தரையிறங்க இருந்த வேளையில், ஓடுபாதையை ஈரோஸ் போராளிகள் தகர்த்து அம்முயற்சியை முறியடித்தனர் என்பது தெரிந்ததே. (உ–எ)

### சுட்டிபுரம் ஆலயத்தில் முன் மண்டபம் நாசம்

வடமராட்சி, ஜுலை 17

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற ஹெலித் தாக்குதலில் சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலயத்தின் முன் மண்டபம் முற்றாக எரிந்து நாசமானது.

ஆலயத்தை நோக்கி 'ரேஸர் புளட்' தாக்குதல் சுமார் முப்பது நிமிடம் வரை நடைபெற்றது.

வடமராட்சியில் இருந்து இடம் பெயர்ந்த பெருந் திரளான அகதிகள் இந்த ஆலயத்தில் தான் தங்கியிருந்தனர்.

ஆலயத்தில் இருந்த விலைமதிப்பற்ற மரங்கள் இத்தாக்குதலில் எரிந்து நாசமாகின.

சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான சித்திரத்தேர் தெய்வாதீனமாகத் தப்பியது. (உ-எ–160)

# நெல்லியடி முகாம் இடம்மாற்றப்படும்

யாழ்ப்பாணம் ஜுலை 17

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இராணுவத்தினர் அடுத்த வாரம் அளவில் இம் முகாமை விட்டு வெளியேறி வேறொரு பகுதியில் முகாம் அமைக்க முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

இதற்கான நடவடிக்கைகளை இராணுவ உயர் அதிகாரிகள் தற்பொழுது மேற்கொண்டு வருகின்றனர்.

வடமராட்சிப் பகுதியில் மிகவும் பலம் வாய்ந்ததாக அமைக்கப்பட்ட இந்த முகாம் அண்மையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான போது ஐம்பதுக்கும் அதிகமான சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். பல கட்டடங்களும் இடிந்து நொருங்கியுள்ளன.

எஞ்சியுள்ள கட்டடங்களில் பாரிய வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதன் காரணமாக இராணுவத்தினர் அங்கு இருக்க அச்சம் தெரிவித்துள்ளனராம்.

இதனையடுத்தே இந்த இராணுவமுகாமை மாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வடமராட்சியில் உள்ள மற்றொரு பிரபல கல்லூரியில் மேலதிக இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வருவதாகவும்–

அங்கேயே இந்த இராணுவ முகாம் மாற்றப்பட உள்ளதாகவும் நம்பிக்கையாகத்தெரிய வருகிறது. (உ–10)

### கடைகள் பல கொள்ளை

யாழ்ப்பாணம், ஜுலை 17

நெல்லியடிப் பகுதியில் உள்ள பெரும்பாலான கடைகளில் இருந்து பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய முகாம் தாக்கப்பட்டதையடுத்து அங்கிருந்து இராணுவத்தினர் வெளியேறி இந்த அட்டகாசச் செயல்களைச் செய்ததாகக் கூறப்படுகிறது.

வேறு சில கடைகள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை நேற்று வடமராட்சிப் பகுதிக்கு சென்ற அரச அதிகாரிகளும் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் சிற்றுண்டி அருந்துவதற்குக் கூட கடைகள் இன்றி அலைந்தனராம்.

இந்திய நிவாரணப் பொருள்களுடன்

### நான்காவது கப்பல் நேற்று புறப்பட்டது

சென்னை, ஜுலை 17

இந்திய நிவாரணப் பொருள்களை ஏற்றிக் கொண்டு நான்காவது உணவுக்கப்பல் நிக்கோட்ரேட் காங்கேசன்துறை நோக்கி நேற்றுக் காலை 9-20 மணியளவில் சென்னைத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டது.

இக்கப்பலில் ஆயிரம் தொன் உணவுப்பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்திய உணவுக் கூட்டுத்தாபன தமிழ் நாடு மண்டல மேலாளர் திரு. கே. எல். ராவ் கப்பலில் வருகின்றார்.

## பிரேமாவுக்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டம்

லண்டன், ஜுலை 17

லண்டனில் பிரதமர் பிரேமதாஸாவுக்கு எதிராக தமிழர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கட்டடக் கலைஞர்கள் மாநாடு ஒன்றைத் தொடக்கிவைக்க பிரதமர் பிரேமதாஸ பிரைட்டன் நகருக்குச் சென்றார்.

மாநாட்டில் பேசிவிட்டுத் திரும்பும்போது இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

மாநாட்டு மண்டப வாயிலில் இருந்து நூறு யார் தொலைவில் தமிழீழக் கோரிக்கைக்கு ஆதரவானவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் குழுவுக்கு எதிரானவர்கள் போட்டி ஆர்ப்பாட்டத்தையும் அங்கு நடத்தினராம்.

—இப்படி லண்டன் செய்திகள் தெரிவித்தன. (உ–எ)

உணவு அனுப்பினல் போதாது

## இராணுவத்தை அனுப்புங்கள்!

பழனி நகரசபை கோரிக்கை

பழனி, ஜுலை 17

இலங்கைத் தமிழர்களுக்கு உணவு அனுப்பினல் மட்டும் போதாது. அவர்களைக் காப்பாற்ற இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று பழனி நகரசபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பழனி நகரசபைக் கூட்டம் நகரசபைத் தலைவர் க. குமாரசாமி தலைமையில் நடந்தது.

கூட்டத்தில் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு.வி. மாடசாமி இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற இந்திய அரசு உணவு வழங்கியதற்காக பிரதமா ராஜீவ் காந்திக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் கொண்டு வந்தார்.

தீர்மானத்தின் மீது பேசிய உறுப்பினர்களும் நகரசபைத் தலைவரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)





எவ்வளவு அட்டூழியங்களுக்குள்ளே சிவிச்சாலும், தமிழன் ஒருவனுக்கு உயர் பதவி கிடைச்சதைக்கேட்க மனசுக்கு எவ்வளவு சந்தோஷமாய் இருக்கு……… வெங்கட்டுக்கு என்ரை நல் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

## அந்தோ வடமராட்சி வெறும் பாலைவனம்!

அங்கு சென்று திரும்பிய இந்தியப் பிரமுகர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜுலை 17

வடமராட்சிப் பகுதி, மக்கள் இல்லாத வெறும் பாலைவனம் போல் காட்சியளிக்கிறது.

இராணுவத்தினரின் நடமாட்டமும், இராணுவ வாகனங்களின் உறுமல் சத்தமும்தான் இப் பகுதிகளில் கேட்கின்றன.

–நேற்று வடமராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்த இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

இரண்டாம் கட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

### சாப்பாடு கொண்டுபோனவர் படையினரிடம்

யாழ்ப்பாணம், ஜுலை 17

அந்தியேட்டி வீட்டில் இருந்து சாப்பாடு கொண்டு போனவரை 'புலிப் படைக்கா சாப்பாடு கொண்டு போகின்றாய்' என்று கேட்டு சிப்பாய்கள் அழைத்துச் சென்றனராம்.

இச் சம்பவம் முல்லைத்தீவு பகுதியில் இடம் பெற்றது.

இராணுவ நடவடிக்கையின் ஒரு கட்டமாக சிப்பாய்கள் நடத்திய தேடுதலின்போது இந்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைதானவரின் பெயர் ராஜன். இவருக்கு பின்னர் என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

### சுபநேரம்

17–07–1987

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:–
6 00 முதல் 7.30 வரை

ராகுகாலம்:–
10.30 முதல் 12.00 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஆடிப் பிறப்பு
முன்னிரவு 8. 06 முதல் அட்டமி.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

**சேவை**

முதலாம் குறுக்குத் தெருவில் இயங்கி வந்த யாழ் சைவீஸ் றெஸ்ரோறன்ற் தற்போது 168 கோவில் வீதியில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இது கைலாயபிள்ளையார் கோயில் சந்தியிலிருந்த கோவில் வீதி தெற்குப் பக்கமாக நூறு யார் தொலைவில் உள்ளது. (1286)

**புத்தகம்**

காத்திருந்தது போதும்' வெளிவந்துவிட்டது "வாழ்க்கைக்கு நலம் தரும் நியூமராலஜி" தனிப்பிரதி 6/50, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். தபாலில் பெறுவதாயின் ஒன்பது ரூபா முத்திரைகள் அனுப்பவும். டேவிட் லிகோரி, 38, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (1280)

**விண்ணப்பம்**

இந்தியாவில் அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகளில் அனுமதிபெற விரும்பும் மாணவ/மாணவிகள் 18ஆம் திகதிக்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும். உடன் ஊனமுற்றோருக்கு முன்னுரிமையுண்டு. தகைமை:- G. C. E. (O/L); 1-7-87 அன்று உள்ளபடி 20 வயதிற்குக் குறைவாக இருக்கவேண்டும். "ஹரிஹரன் என்ரபிரைஸ்" 337, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (1282)

**தேடப்படுகிறார்**

பருத்தித்துறையைச் சேர்ந்த குழந்தைப்பிள்ளை வைத்தியரும், செட்டி சந்தையா வைத்தியரின் பேரனுமான ஆயுர்வேத வைத்தியர் ந. பத்மநாதன் குடும்பத்தினரை திரு. வே. முருகேசுச் சுவாமியவர்கள் தேடுகிறார்கள். தகவலறிந்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்துக்கு அறியத்தரவும். வே. முருகேசு சுவாமி, சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலி. (1288)


## 10 பிரதேச சபைகளுக்கு போட்டி

மட்டக்களப்பு, ஜூலை 17

கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சுயேச்சைக் குழுவாக 10 பிரதேச சபைகளுக்குப் போட்டியிடுகிறது.

காத்தான்குடி, மூதூர், கிண்ணியா, கல்முனை, நிந்தவூர், சம்மாந்துறை, பொத்துவில், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஓட்டமாவடி ஆகியவையே இந்த 10 பிரதேச சபைகளும் ஆகும்.

ஓட்டமாவடி பிரதேச சபைக்கு இது போட்டி இன்றி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வேட்பாளர்களுக்கு தராசு சின்னம் வழங்கப்பட்டுள்ளது. (இ-21)


**Medical Laboratory Technologist**

Closing date for Application Bio Data and Curriculum Vitae exte ded till 15-8-87 as requested by Out Station candidates.

DIRECTOR,
MATERNITY AND NURSING HOME,
MARKET SQUARE,
CHANKANAI.

(1283)


# உழைக்கும் நபர் கைதானால் அக்குடும்பத்திற்கு நிவாரணம்

## லலித்திடம் திருமலைப் பிரசைகள் குழு கோரிக்கை

திருகோணமலை, ஜூலை 17

குடும்பத்தில் உழைக்கும் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டால் அந்த நபர் விடுவிக்கும் வரை அக்குடும்பத்திற்கு தொடர்ந்து அரச நிவாரணம் வழங்க வேண்டும். இப்போது இத்தகைய நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

—தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியிடம் இத்தகைய கோரிக்கை ஒன்று விடுக்கப்பட்டிருக்கிறது.

பூஸா, பலவத்தை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள திருகோணமலை மாவட்டத் தமிழர் பற்றி திருமலை பிரசைகள் குழுவின் தூதுக் கோஷ்டி ஒன்று, அமைச்சர் லலித் அத்துலத் முதலியை கொழும்பில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியது.

அப்போது மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

தூதுக் கோஷ்டியில் பிரசைகள் குழுவின் உபதலைவர் டாக்டர் பெர்ணாண்டோ, இணைச்செயலாளரான வணபிதா பீட்டர் குருகுல ஆராய்ச்சி மற்றும் திரு. பி. ஆறுமுகம் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

சுமார் ஒரு மணித்தியாலம் வரை இப்பேச்சுக்கள் நீடித்தன.

தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் பற்றிய விவரங்களை தூதுக்கோஷ்டி அமைச்சருக்கு எடுத்துச் சென்னது.

★ விசாரணை முடிந்த பின்னரும் பல மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள்—

★ நோய் வாய்ப்பட்டு இருப்பவர்கள், மாணவர்கள்—

★ 18 மாதங்களுக்கு மேலாக விசாரணையே இன்றி தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள்—

ஆகியோர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

இத்தகைய கோரிக்கை ஒன்றையும் தூதுக் கோஷ்டியினர் அமைச்சர் முன் வைத்தனர்.

இக்கோரிக்கைகள் பற்றி ஆராய்ந்து விரைவில் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதி அளித்தார். (உ-எ-150)

## 60 நாள் காசோலை வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ் கல்வித்திணைக்களம் கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் 60 நாட்கள் செல்லுபடியாகும் காசோலைகளை இம்மாதம் தொடக்கம் வழங்கவுள்ளது.

இது சம்பந்தமான உத்தரவுகளை யாழ் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம்- மன்சூர் நிதிப் பகுதிக்கு வழங்கியுள்ளார்.

இதுவரை காலமும் 30 நாட்கள் செல்லுபடியான காசோலைகளே வழங்கப்பட்டு வந்தன. (உ-119)

# கம்பன் விழா

## இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 17

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் மூன்று நாள் கம்பன் விழா இன்று மாலை ஆரம்பமாகின்றது.

இன்றைய நிகழ்ச்சிகள் மாலை 4-30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் திருவாளர்கள் ஆர். சுந்தரமூர்த்தி, வி. கே. கானமூர்த்தி, வி. கே. பஞ்சமூர்த்தி குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

முதல் நாள் நிகழ்ச்சிக்கு கலைப்பேரரசு திரு. ஏ. ரி. பொன்னுத்துரை தலைமை வகிப்பார்.

யாழ். தேசிய கூட்டுறவு சபைத் தலைவர் திரு. சி. சிவமகாராசா மங்கள விளக்கேற்றுவார்.

கழகத்தின் அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் வரவேற்புரை நிகழ்த்துவார்.

நல்லை ஆதீன குரு மகா சந்நிதானம், யாழ் குருத்துவக்கல்லூரி விரிவுரையாளர் அருட்திரு வின்சன்ற் பற்றிக் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவர்.

காங்கேசன் சீமெந்து ஆலை பொறியியலாளர். திரு. ம. ஜனநாயகம் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

அடுத்து புலவர் ஈழத்துச் சிவானந்தன் தலைமையில் பட்டி மண்டபம் நடைபெறும்.

'இன்றைய சூழலில் எம்மவர் நெஞ்சில் பெரிதும் பதிய வேண்டியது–

'சிதையின் உறுதியே'– என திரு. க. நாகேஸ்வரன், திரு. தி. திருநந்தகுமார் ஆகியோரும் –

'சுமித்திரை தியாகமே'– என பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளை, திரு. ந. கணேசமூர்த்தி ஆகியோரும் 'கும்பகர்ணன் வீரமே' என திரு. ச. ஜெயச்சந்திரன், திரு ச. சிவகுமாரன் ஆகியோரும் மன்றில் வாதிடுவர்.

பட்டிமண்டப நதிவாளராக வித்துவான் சி. குமாரசாமியும் –

நோக்கர்களாக திரு. சி. சிலவலிங்கராசா, திரு. எஸ். இராகவன், திரு. டொமினிச்ஜீவா, திரு. நா. சோமகாந்தன், திருமதி. சோமகாந்தன், திரு.வே.வரதசுந்தரம், செல்வி.புஷ்பா செல்வநாயகம், திருமதி பு. ஞானலிங்கம், திரு. ம. சிவராஜா, திரு. ந. தேவராஜன், திரு. ஈ. ஏகநாதன் ஆகியோர் கடமையாற்றுவர். (உ)

# டிச:19 யோசனை

## பற்றிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 17

'டிசம்பர் 19 யோசனையும் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலமும்' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை ஆறுமணி வரை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறும்.

கருத்தரங்கில் 'டிசம்பர் 19 யோசனையும் நிலமும் மக்களும்' என்ற தலைப்பில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, 'டிசம்பர் 19 யோசனையும் பிரதேச அபிவிருத்திக்கான சாத்தியக் கூறுகளும்' என்ற தலைப்பில் கலாநிதி வே. நித்தியானந்தன் 'டிச. 19 யோசனை வரை ஏற்பட்ட உடன்பாடுகளும் ஒப்பந்தங்களும்' என்ற தலைப்பில் கலாநிதி சி. க சிற்றம்பலம் 'டிச. 19 யோசனையும் நிறுவன ரீதியான ஒழுங்குகளும்' என்ற தலைப்பில் கலைப்பீடாதிபதி திரு. ந. பாலகிருஷ்ணன், 'டிச 19 யோசனையும் இதில் சம்பந்தப்படும் பல்வேறு தரப்பினரிதும் நோக்கு நிலையும்' என்ற தலைப்பில் கலாநிதி கிருஷ்ணராசா, 'இலங்கையின் இன்றைய அரசியல் சூழலும் தமிழ் பேசும் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையும்' என்ற தலைப்பில் திரு ச. சத்தியசீலன் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (இ-10)

# கிண்ணியா - மூதூர் பிரதேச சபைகளுக்கு

## தனி முஸ்லிம் வேட்பாளர்கள்

மட்டக்களப்பு, ஜூலை 17

திருமலை மாவட்டத்தில் கிண்ணியா, மூதூர் பிரதேச சபைகளுக்கான தேர்தல் வேட்புமனுக்களில் தனி முஸ்லிமகள் இடம்பெற்றுள்ளார்கள்.

மூதூர்ப் பிரதேச சபைக்கு ஐ. தே. க. சார்பில் ஜனாப். சி. எம். ராசிக் தலைமையிலும், முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவிலான சுயேச்சைக் குழு ஜனாப். ஏ. எம். எம். ரபீக் தலைமையிலும் போட்டியிடுகின்றன.

கிண்ணியா பிரதேச சபைக்கு ஐ. தே. க. ஜனாப். ஏ. காலிதீன் தலைமையில் போட்டியிடுகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவிலான சுயேச்சைக்குழு ஜனாப் கே.எம். புகாரிதீன் தலைமையில் போட்டியிடுகின்றது.

ஜனாப் எம். ஏ. முகமட் மஃரூப் தலைமையில் மற்றுமோர் சுயேச்சைக் குழுவும் போட்டியிடுகிறது.

இவர்கள் அனைவரும் முஸ்லிம்களே.

கந்தளாய்ப் பிரதேச சபைக்குரிய 14 வேட்பாளர்களில் ஐ. தே. க. வுக்கு திரு. டபிள்யூ எம்.ஜி மின்காமிதலைமை வகிக்கின்றார்.

ஜனாப். பி. எம். எம். ஜவாகிர், கே. ரி. ஏ. கலீல், ரி. அப்துல்லா ஆகிய மூன்று முஸ்லிம்கள் இடம்பெற்றுள்ளார்கள்.

சுயேச்சைக் குழுவில் போட்டியிடும் திரு. சரத் டி. சில்வா தலைமையிலான குழுவில் ஜனாப், ஏ. பி. அலிமுகமட், ஏ. சி. மஃரூப், முஸ்தபா சகாப்தீன் ஆகிய மூன்று முஸ்லிம்கள் இடம்பெற்றுள்ளார்கள்.

திருமலை நகர பிரதேச சபைக்கு திரு. கே. பி. மார்ஷால் தலைமையில் ஐ. தே. க. போட்டி இன்றித் தெரிவானது. 12 வேட்பாளர்களில் ஏ. சகாப்தீன் என்ற முஸ்லிம் மட்டும் இடம் பெறுகிறார்.

எமாராவேவா பிரதேச சபைக்கு திரு. எம்.ரன்பண்டா தலைமையில் போட்டியின்றித் தெரிவான ஐ. தே. க. வேட்பாளர் 2 பேரில் எச். எம். ராஷிக் என்ற முஸ்லிம் இடம் பெற்றுள்ளார்.

பதவியா–ஸ்ரீபுர பிரதேச சபைக்கு திரு. அல்ஷன் பத்திராவிதான தலைமையிலான ஐ. தே. க. போட்டியின்றித் தெரிவானது. 12 பேரில் அனைவரும் சிங்களவர்கள்.

கோமரங்கடவல பிரதேச சபைக்கு கே. எம், மகிந்தபால தலைமையில் ஐ. தே. க. போட்டியின்றித் தெரிவானது. 12 பேரும் சிங்களவர்.

அதேநேரம் திருமலை நகர சபைக்கு போட்டியின்றித் தெரிவான ஐ. தே. க. வேட்பாளர்கள் 15 பேரில் இருவர் மட்டும் முஸ்லிம்கள், (இ-21)

# கால்நடைகளைக் கொண்டுவர தடைவிதிப்பு

பலாலி, ஜூலை 17

மாவிட்டபுரம், வீமனகாமம் பகுதிகளில் தத்தமது வீடுகளிலுள்ள பொருள்களை எடுத்து வரச் சென்றபொது மக்கள் தமது ஆடு, மாடுகளையும் தம்முடன் கொண்டு செல்வதை சிப்பாய்கள் தடுத்துள்ளனர்.

இவைகளைத் தம்மிடம் ஒப்படைத்துச் செல்லும்படியும், அல்லது தத்தமது வீடுகளில் விட்டு விட்டுச் செல்லும்படியும் 'காவல்' கடமை புரிகின்ற சிப்பாய்கள் கூறியதாகத் தெரியவந்துள்ளது.

இக்கால் நடைகளை ஒன்றுசேர்த்து பராமரித்து வளர்க்கும் இராணுவத்தினர் அவைகளைத் தேவைப்படுகின்றபோது தமது உணவுத் தேவைக்காகப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பாடசாலையில் பிரார்த்தனை

கட்டுவனை விட்டு இடம் பெயர்ந்து சென்று ஏழாலை வடக்கில் தஞ்சமடைந்த போது கடந்த மாதம் பலாலி ஷெல்லினால் மரணமடைந்த சட்டுவன் புலம் மகா வித்தியாலய மாணவன் செல்வன் செ. ரவிக்குமாரின் ஆத்ம சாந்திக்காக வித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள் அதிபர் திரு.க. இராசதுரை அவர்களின் தலைமையில் பிரார்த்தனை நடத்தினர்.

இம்மாணவனின் குடும்பத்திற்கு பொதுநல நிறுவனங்களின் உதவி மூலம் நிதி உதவி பெற்றுக் கொடுக்க உதவுவதாகவும் மாணவனின் குடும்பத்தாருக்கு அதிபர் இராசதுரை உறுதியளித்தார்.

ஏழாலையில் இம்மாணவனுடன் திரு இராசேந்திரம் (வண்டிக்காரர்) செல்வி- பபி (19 வயது) என்போரும் இறந்தது குறிப்பிடத்தக்கது. (உ-119)

## மாணவர்கள் அச்சம்

அச்சுவேலிப் பகுதியில் பாடசாலைக்குச் செல்ல மாணவர்கள் அஞ்சுகின்றனர்.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினால் பாடசாலை மாணவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து இருந்தனர்.

கடந்தவாரம் மட்டில் தான் குறிப்பிடத்தக்களவு மாணவர்கள் வகுப்புக்களுக்கு திரும்பினர். இந்த மாணவர்களின்வரவும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விமானத் தாக்குதலை அடுத்து சீர்குலைந்துள்ளது.

பத்தமேனி கிராம சேவையாளர் பகுதியில் மட்டும் ஐந்து பாடசாலைகள்செயற்படாமல்மூடப்பட்டுள்ளன. (உ-11)

# நல்லூரில் தங்கி உள்ள வடமராட்சி அகதிகளுக்கு

## அரச நிவாரணப் பொருள்கள்

வடமராட்சி, ஜூலை 17

வடமராட்சிப் பகுதியில் பாதிக்கப்பட்டு நல்லூரில் தஞ்சம் அடைந்தோர் அரச நிவாரணப் பொருள்களைப் பெறுவதற்கான பெர்மிட்டுக்கள் செவ்வாய்க்கிழமை முதல் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன.

இவர்களுக்கு இந்திய நிவாரணப் பொருள்களை விநியோகிப்பது பற்றி நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆனால் இந்திய நிவாரணப் பொருள்களைப் பெறுவதற்காக இடம் பெயர்ந்தவர்களால் பூர்த்தி செய்து கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் பெருமளவில் நல்லூர் உதவி அரச அதிபர் பணிமனையில் சேர்ந்த வண்ணமுள்ளன.

இந்திய நிவாரண உணவுப்பொருள் விநியோகம் தொடர்பாக தமக்கு எந்த விதமான அறிவித்தலும் கிடைக்கவில்லை என உதவி அரச அதிபர் பணிமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-7-160)

# கரணவாயிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள்

சாவகச்சேரி ஜூலை 17

கரணவாய்பகுதியைச் சேர்ந்த மக்கள் பலர் மட்டுவில் செல்லப்பிள்ளையார் ஆலயத்திலும் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்திலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களின் விவரங்களைத்திரட்டி அரச அதிபருக்கூடாக உதவி பெறுவதற்கான நடவடிக்கைகளை கிராமசேவகர்கள் திரு. வே. திருநாவுக்கரசு, திரு. ஏ. இரத்தினசிங்கம் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

இரவிரவாக உப்பாற்றுவெளியை கடந்து கால்நடையாகவே இவர்கள் வந்து சேர்ந்தனர்.

வராத்துப்பளை, பல்லப்பை, கற்கோவளம் பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறி கரையோரக் காட்டுப் பகுதியால் குடத்தனை, நாகர்கோவில் சென்று அங்கு சிலர் தங்க ஏனையோர் எழுதுமட்டுவாள் மிருசுவில் பகுதியை வந்து சேர்ந்தனர். (இ—31)

## மக்கள் முகம்

### புதிய சட்டத்தரணி

யாழ்ப்பாணம், ஜூலை 17

கைதடி தெற்கு நாகரத்தினம் – குணபாலசிங்கம் புதிய சட்டத்தரணியாக உயர் நீதிமன்ற நீதியரசர்கள் திரு. ஆர். எஸ். வனசுந்தரா, திரு எல். எச். டீ. அல்விஸ், திரு. ஓ. எஸ். எம். செனிவிரத்தின ஆகியோர் முன்னிலையில் அண்மையில்



சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இவர், காலஞ்சென்ற தபால்அதிபர் செல்லையா நாகரத்தினத்தின் மகனுவார்.

இவர் தெல்லிப்பளை பன்னாலை சேர். கனகசபை வித்தியாசாலை, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும் கொழும்பு பல்கலைக்கழக சட்டப் பட்டதாரியுமாவார்.

இவர் தற்போது யாழ்ப்பாணம் வடக்கு [illegible] உத்தியோகத்தராக கடமை புரிகிறார். (இ)

# பனம்பொருள் உ.வி.கூ.சங்கத்தின் 1,500 தொழிலாளர்கள் வேலையிழப்பு

பலாலி, ஜூலை 15

பருத்தித்துறைப் பகுதி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமை புரியும் நூறு ஊழியர்களும் சுமார் அயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் தொழில் இழந்த நிலையில் வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாது நடுத்தெருவில் நிற்கும் நிலை உருவாகியுள்ளது.

அண்மைய வடமராட்சியின் 'ஒப்பறேசன் லிபறேசன்' நடவடிக்கையினைத் தொடர்ந்து இச்சங்கத்தின் தலைமைப் பணிமனை யுட்பட பல கிளைகளும் கட்டடங்களும், தொழிற்சாலைகளும், அவற்றின் பெறுமதி மிக்க இயந்திர சாதனங்களும் இராணுவத்தினால் அழிக்கப்பட்டமையே இந்நிலைக்குக் காரணமாகும்.

மந்திகையில் அமைந்திருந்த— ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான— தலைமைப் பணிமனைக் கட்டடம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுப் பின் புல்டோசரினால் இடித்துத் தள்ளப்பட்டுள்ளது.

சங்கத்தின் சீவித் தொழிற்சாலை கட்டடமும் சுமார் ஒருலட்சம் ரூபா பெறுமதியுடைய [illegible] இயந்திரங்கள் இரண்டுடன் சேர்த்தும்— சுங்கப்பணிமனையுடன் இணைந்திருந்த பனம் தும்புத் தொழிற்சாலைக் கட்டடமும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

இந்தத் தொழிற்சாலை பனை அபிவிருத்திச் சபையின் ஆதரவில் இயங்கி வந்தது

இந்தத் தொழிற்சாலையில் தும்பு தயாரிக்கும் இயந்திரமும் சேதமுற்றுள்ளது. (உ-119)

## தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் தண்ணீர்த் தட்டுப்பாடு

பலாலி, ஜூலை 17

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நோயாளர்களுக்குக் கூட குடி தண்ணீர் வீடுகளில் இருந்து தருவித்து வழங்கப்படுகின்றது.

வைத்தியசாலையின் நீரிறைக்கும் 'பம்பி' இரண்டும்பழுதடைந்து விட்டதாகவும்—

அவற்றைத் திருத்த கொழும்பில் இருந்தே சுகாதார அமைச்சின் தொழில்நுட்பவியலாளர்கள் வரவேண்டுமெனத் தெரிய வந்துள்ளது.

மிகப்பழைமைவாய்ந்த பாரிய அமைப்புடைய இவ்வியந்திரங்களைத் திருத்தும் நிபுணத்துவம் தெரிந்தவர்கள் கொழும்பு சுகாதாரப் பகுதியில் மட்டுமே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-119)

## பாதிப்புற்றோர் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

இராணுவ நடவடிக்கைகளால் பாதிப்புற்று பல்வேறு கிராமங்களிலிருந்து ஊரெழுவுக்கு இடம் பெயர்ந்தோரின் பாதிப்பு விவரம் ஊரெழு பிரசைகள் குழுவினரால் துரிதமாகச் சேகரிக்கப்படுகின்றது.

இதற்கான படிவம் இடம் பெயர்ந்தோரின் வசதிக்காக ஊரெழு மதி அக்கடமியில் விநியோகிக்கப்படுகின்றது. [உ]

## பிரசைகள் குழு புனரமைப்பு

பலாலி, ஜூலை 17

கீரிமலைப்பகுதியின் பிரசைகள்குழு புனரமைக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இயங்காதிருந்த இப்பிரசைகள் குழுவானது, அதன் முன்னாள் தலைவர் திரு. நா. சுந்தரமூர்த்தியின் முயற்சியால் புதிய உத்தியோகத்தர் தெரியப்பட்டு புனரமைக்கப்பட்டது. (உ-119)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

பிரார்த்தனையின் சக்தி மகத்தானது. சரியான அலைவரிசையில் பிரார்த்தனையில் ஈடுபடுங்கள். அதனால் கிடைக்கும் சக்தியினால் மலையையும் அசைக்க முடியும்.

— அறெனன்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
17.07.1987 க.பெ.இல: - 23

# பல வருடங்களின்பின் மீண்டும் அந்த ஈனக் குரல்!

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளில் தென்னிலங்கையில் அப்பகுதி மக்களுக்கு இன வெறி ஊட்டிய குரல் ஒன்று மீண்டும் அங்கே ஒலிக்கக் கேட்கிறது.

1958 இனக் கலவரத்துக்கும், அதற்குப் பிந்திய காடைத்தனங்களுக்கும் அத்திவாரமிட்டவர்களில் ஒருவரின் குரல் மீண்டும் அனுசகாரமாக அங்கிருந்து கேட்கிறது. பல வருட கால இடைவெளியின் பின் அந்த ஈனக் குரல் கேட்கிறது.

இடைக்காலத்தில் அது சிறிது ஓய்ந்திருந்தது. வயது போன காலத்தில் மீண்டும் இனத் துவேஷத்தைக் கக்கி உள்ளூராட்சி அரசியலில் முன்னுக்கு வர அது முனைகின்றது!

முன்னாள் வெலிமடை எம். பி. திரு. கே. எம். பி. ராஜரத்தினவின் அந்தக் குரல் இம்முறை மலையகத்தில் இரத்தக் களரியை உண்டாக்கும் எண்ணத்தோடு ஒலித்திருக்கிறது. அதில் சந்தேகத்துக்கு இடமிருக்க முடியாது.

சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்ட 1956 ஆம் ஆண்டும், அதற்கு பிந்திய ஓரிரண்டு வருடங்களும் இலங்கைத் தீவில் சிங்களவெறி கோரத் தாண்டவம் ஆடிய காலம். தங்கள் அரசியல் லாபங்களுக்காக, தென்னிலங்கைத் தலைவர்கள் சிங்கள மக்களுக்கு தமிழர்களை ஜன்ம விரோதிகளாக்கிக் காட்டினர்.

அவர்களில் பெயர் பெற்ற ஒருவர் இந்த கே. எம். பி. ஆர். இனத்துவேஷம் என்ற விஷ வித்தை தென்னிலங்கை மக்கள் மத்தியில் விதைத்து, அவர்களை இனவெறி கொள்ளச் செய்ததில் பெரும் பங்கு வகித்தவர் இந்த கே. எம். பி. ஆர்.

ஏ. பி. ஜெயசூரியா, ஹேமா பசநாயக்கா, கொடகும்பர, ரி. பி. இலங்கரத்தின மற்றும் பலர் கொண்ட சிங்கள பேரினவாதக் கும்பல் ஒன்று இவரைப் போலவே தமிழர்களை இந்நாட்டிலிருந்து விரட்டி அடிக்க வேண்டும் என்று நினைத்து சிங்கள மக்களுக்கு இனவெறியைக் காலத்துக்குக் காலம் ஊட்டியது. அவர்கள் விதைத்த அந்த விஷ வித்துக்கள் முளைத்து, வளர்ந்து, தோப்பாகி நிற்பதை இன்றைய ஆயுதப் போராட்டமும், அழிவுகளும் நிதர்சனமாக்கிக் காட்டுகின்றன.

இனப்பற்று ஒவ்வொருவனுக்கும் இருக்க வேண்டியதே. மொழிப்பற்று, மண்பற்று என்பனவும் அவ்வாறே. ஆனால் அந்தப் பற்றும், பாசமும், நேசமும் வெறியாக மாறக் கூடாது. பேரினவாதமாக உருவெடுக்கக் கூடாது. அப்படி மாறினால், உருவெடுத்தால் அது சம்பந்தப்பட்ட இனத்துக்கு மட்டுமன்றி நாடு முழுவதற்குமே அழிவைத் தேடித் தரும்.

தாம் முந்திக் கக்கிய இனத் துவேஷத்துக்கு எதிராகப் பிறந்தவர்கள்தான் இன்றைய தீரம் நிறைந்த தமிழ்ப் போராளிகள் என்பதை அவரும் அவரைப் போன்றவர்களும் உணராதிருப்பது ஏனோ? இதனை இலங்கையும் அதன் மக்களும் செய்த பாவம் என்று சொல்வதைவிட வேறு வசனமில்லை.

வடக்கு, கிழக்கை இரத்தக் களரியாக்கி, யுத்த களமாக்கியது போதாது என்று மலையகத்தையும் அவற்றைப் போலாக்குவதற்கு திரு. கே. எம். பி ஆர். போன்றவர்கள் அத்திவாரம் போடுகிறார்கள் என்று கூறுவதைவிட வேறு வாசகமில்லை.

எந்த ஓர் இனத்தையும் மற்ற இனம் அடக்கி, ஒடுக்கி ஆள முடியாது. அதற்கு எவ்வழியால் முயன்றாலும் பெரும் புரட்சியும் போரும் வெடித்தே தீரும். இந்தச் சின்ன உண்மையை தென்னிலங்கையில் ஆட்சியில் உள்ளவர்களும், ஏனைய இனவெறி அரசியல்வாதிகளும் உணராதிருப்பது வியப்பைத் தருவதாகும்.

மலையகத் தமிழர்களை தமது தோட்டங்களில் வேலை செய்யும் வெறும் கூலிகளாக அடக்கி வைத்திருக்கவே சிங்களப் பேரினவாதமும், முதலாளித்துவமும் விரும்புகின்றன. அது இனியும் முடியாது. மலையகத் தமிழர்களும் இந்த நாட்டுப் பிரசைகளாகிவிட்டார்கள். அவர்கள் இனித் தமது உரிமைகளுக்காகத் துணிந்து போராட ஓர் உந்துசக்தியாகப் பிரசா உரிமை விளங்கும் என்பது இயற்கை. அவர்களும் சகல மனித உரிமைகளுடனும், அரசியல், பொருளாதார, கல்வி, கலாசார உரிமைகளுடனும் வாழ வழி செய்யப்படாவிட்டால் மலையகமும் மற்றொரு யாழ்ப்பாணமாக மாறுவதை எவராலும் தடுத்துவிட முடியாது என்பது உண்மைதான். அதனைத் தான் சரியாகப் புரிந்துகொண்டு கே. எம். பி. ஆர். சொன்னாரோ?

கே. எம். பி. ஆர். போன்றவர்கள் மட்டுமன்றி ஆட்சியில் உள்ளவர்கள் மட்டுமன்றி, தென்னிலங்கை, மலையகச் சிங்கள மக்கள் அனைவருமே இந்த உண்மையை உணர வேண்டிய காலம் இப்போது வந்து விட்டது.

---

வளைகுடாப் பிரச்சினை:

# ஐ.நா.சபையின் பிரேரணைக்கு திருத்தங்கள்

வாஷிங்டன், ஜூலை 16

வளை குடாவில் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு ஐ. நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தரப்பிரதிநிதிகள் கொண்டுவரும் பிரேரணைக்கு அணிசேரா இயக்க நாடுகள் திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளன.

★ ஈரான் – ஈராக் யுத்த நிறுத்தத்துக்கு சம்மதிக்க வேண்டும். சர்வதேச எல்லைக்கு இரண்டு நாடுகளின் படைகளும் விலக்கிக்கொள்ளப்பட வேண்டும் சிறைக் கைதிகளை பரிமாற்றம் செய்ய வேண்டும்.

இதற்கு ஒப்புக்கொள்ள மறுக்கும் நாட்டின் மீது ஆயுதத்தடை விதிக்கப்பட வேண்டும்.

இப்படி 5 நிரந்தர உறுப்புநாடுகள்கொண்டு வரும் பிரேரணையில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு அணி சேரா இயக்க நாடுகள் கொண்டு வந்துள்ள திருத்தங்கள் வருமாறு;

★ வளை குடாவில் யுத்த நிறுத்தத்தை கண்காணிக்க ஐ. நா. அவதானிகள் குழு நியமிக்கப்பட வேண்டும்.

★ யுத்தத்தில் இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டது பற்றி விசாரிக்கப்பட வேண்டும்.

ஐ நா. பாதுகாப்புச் சபையில் உள்ள ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகள் வருமாறு;

அமெரிக்கா, சோவியத் யூனியன், சீனா, பிரிட்டன், பிரான்ஸ். (இ-எ)

**வெளி உலகில்**

---

### குடிபோதையில் விபத்துக்கள் அதிகரிப்பு

லண்டன், ஜூலை 16

குடிபோதையில் வாகனங்களைச் செலுத்துவதால் பிரிட்டனில் விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

குடிபோதையில் வாகனங்களைச் செலுத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கக் கூடியதாக சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று அனைத்துக் கட்சி எம். பிக்கள் அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளனர்.

ஆண்டுதோறும் சுமார் 24,000 விபத்துக்கள் போதையில் வாகனங்களை ஓட்டுவதால் ஏற்படுகின்றன என்று கணக்கிடப் பட்டுள்ளது. (இ-எ)

---

# அரசமைப்பு தயாரிக்கும் கமிட்டியில் பவித்ராவும் ஆதரவாளர்களும்

பிஜியின் புதிய அரசமைப்புச் சட்டத்தைத் தயாரிக்க நியமிக்கப்பட்ட கமிட்டியின் இரண்டாவது கூட்டத்தில் பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் பவித்ராவும் அவரின் மூன்று ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

முதல் கூட்டத்தை இவர்கள் பகிஷ்கரித்தனர்.

இந்திய வம்சாவழியினரின் நலன்களைப் பேண முடியாத வகையில் கமிட்டி அமைக்கப்பட்டதாக இவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

பின்னர் கவர்னர் ஜெனரல் இவர்களை அழைத்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

அதைத் தொடர்ந்த கமிட்டியின் விசாரணையின் வரையறை மாற்றி அமைக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்தே டாக்டர் பவித்திரா கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சம்மதித்தார். (இ-எ)

### கூர்க்காலந்து தூதுக்குழு ராஜீவைச் சந்திக்கிறது

புதுடில்லி, ஜூலை 16

கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த 42பேர்கொண்ட தூதுக் கோஷ்டி பிரதமர் ராஜீவ்காந்தியுடன் பேச்சுக்களை நடத்தவிருக்கின்றது.

பேச்சுக்கள் அடுத்த புதன்கிழமை புதுடில்லியில் ஆரம்பமாகும்.

தூதுக் கோஷ்டி செவ்வாய்க்கிழமை டார்ஜிலிங்கில் இருந்து புதுடில்லிக்குப் புறப்படும்.

கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணியின் முன்னரங்க அமைப்புக்களின் பிரதிநிதிகள் எல்லாம் தூதுக் கோஷ்டியில் இடம் பெறுகின்றனர். (இ-எ)

# மரபுகளை மீறவில்லை என்கிறார் ஷெயில்சிங்

பெங்களூர், ஜூலை 16

அரசமைப்புச் சட்ட விதிகளையோ, ஜனாதிபதி பதவிக்குரிய மரபுகளையோ மீறி நான் நடக்கவில்லை.

ஜனாதிபதி ஷெயில்சிங் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெங்களூருக்கு வந்தபோது ஜனாதிபதி செய்தியாளர்களுடன் மனம் விட்டுப் பேசினார்.

அப்போதுதான் அவர் இப்படிச் சொன்னார்.

இம்மாதம் 24ஆம் திகதி பதவி விலகும் ஜனாதிபதிக்கு கர்நாடக ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர் பிரியாவிடை அளித்தனர். [இ-எ]

---

உள்ளூராட்சிச் சபை

# தேர்தலில் போட்டியிடுவது மூலம் இ.தொ.கா. அடையும் பயன் என்ன?

அமைச்சர் தொண்டமான் (12-7-87) கொழும்பு 'சண்டே ஐலண்ட்' பதிப்புக்கு அளித்த பேட்டியின இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

கேள்வி: ஐ.தே.க. டிக்கெட்டில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடுகின்றது. தமிழ்த் தோட்டத் தொழிலாளருக்குப் பிரசா உரிமை பெற நீங்கள் எடுத்த முயற்சிகளுக்குப் பிறகு நடைபெறும் முதலாவது தேர்தல் இது. இத்தேர்தலில் எந்த நோக்குடன் போட்டியிடுகின்றீர்கள்?

தொண்டா: பிரசா உரிமை பெற்ற பலர் முதல் தடவையாக சட்டபூர்வமாக வாக்களிக்கப் போகின்றனர்.

கேள்வி: பிரசா உரிமை பெற்ற அனைவரும் வாக்களிக்கப் போவது இல்லையே!

தொண்டா: ஆம் இத்தேர்தலில் வீதம், விகிதாசாரம் பற்றி நாம் கவலைப்படவில்லை. புதிய வாக்காளர் ஜனநாயக ரீதியில் பயிற்சி பெறும் தேர்தலாக இது அமையப் போகின்றது. இது ஒரு அடையாள முயற்சி.

கேள்வி: பிரசா உரிமை கிடைத்த அனைவரும் இத்தேர்தலில் வாக்களிக்க முடியாது. இத்தேர்தலில் இ. தொ. கா. என்ன பலன் அடையும் என்று நீங்கள் நம்புகின்றீர்கள்?

### தொண்டமான் விளக்கம்

தொண்டா: எதிர்ப்பு இல்லாத படியால் வாக்குகள் பெரும் எண்ணிக்கையில் எமக்குக் கிடைக்கும்.

கேள்வி: எதிர்க்கட்சிகள் போட்டியிட்டிருந்தால் இ. தொ. கா. வின் நிலை வேறாக இருந்து இருக்கும் என்று கருத முடியும் அல்லவா!

தொண்டா: நிலை வேறாகத் தான் இருக்க முடியும்.

கேள்வி: எதிரணிகள் தேர்தலைப் பகிஷ்கரிப்பது குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

தொண்டா: அது அவர்கள் முடிவு. தேர்தலில் போட்டியிட்டு கட்டுப் பணம் இழப்பதற்கு விரும்பியிருப்பின் அதையும் அவர்களால் செய்திருக்க முடியும்.

கேள்வி; மினி தேர்தல்களுக்கு இது உரிய நேரமல்ல என்று எதிரணி கூறுகின்றது. பொதுத் தேர்தலைத் தான் மக்கள் கோருகின்றனர் என்றும் எதிரணி கூறுகின்றது.

தொண்டா: எப்போது தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதை அவர்கள் தீர்மானிக்க முடியாது அதனால்தான் அவர்கள் எதிரணியில் இருக்கின்றார்கள். தேர்தலை நடத்துவது எப்போது என்று தீர்மானிக்கும் உரிமை அரசுக்குத்தான் உண்டு.

மினித் தேர்தல்கள் இப்போது வேண்டாம் எதிரணி கூறுவதன் ஒரு காரணம் மலைநாட்டில் உள்ள புதிய வாக்காளர் தங்கள் ஜனநாயக உரிமையைப் பாவிக்காமல் தடுப்பதற்கே.

இப்போது அவர்களை வாக்களிக்க அனுமதித்தால் அடுத்த பொதுத் தேர்தலில் பிரசா உரிமை எடுத்த அனைவரும் வாக்களிக்கும் உரிமை பெற்றுவிடுவார்கள் என்று எதிரணியினர் எண்ணுகின்றனர்.

கேள்வி: நாட்டில் அவசரகால நிலைமை இருக்கும்போது உள்ளூராட்சித் தேர்தல்களை அரசு நடத்துகின்றது என்று எதிரணி கூறுகின்றது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

தொண்டா: அவசரகாலச் சட்டமும் தேர்

(4ஆம் பக்கம் பார்க்க)

---

# கந்த புராணம் தந்த கச்சியப்பர்

**ஞானக்கதிர்**

### இராசையா ஸ்ரீதரன்

கலியுகவரதனும் கந்தக்கடவுளின் சரிதை கந்த புராணம் வாயிலாக நாம் அறியக்கிடக்கின்றது. கந்தனின் உதயம், வளர்வு, வீரதீர சாகஸங்கள் யாவும் இதில் விவரமாக விரித்துரைக்கப் பெற்றுள்ளது.

இத்தகைய அருமை பெருமை வாய்ந்த கந்த புராணத்தை உலகுக்கு அளித்தவர் கச்சியப்ப சிவாசாரியார். கவி நயமும் சொல் நயமும் மிக்க செய்யுள்களை யாத்து முடித்த கச்சியப்பர் தினமும் அதனைக் கந்தன் திருவடி நீழலில் வைத்துப் போவார். தனது கதை சரியாக இருக்கின்றதா என தானே சரி பார்த்து, தவறிருப்பின் அவற்றைத் திருத்தி வைப்பார் முருகன்.



மறுநாள தான் பாடியவற்றில் அழகான திருத்தங்கள் செய்யப் பெற்றிருப்பதைக் கண்டு அளவிலா ஆனந்த முறுவார். இவ்வாறு கதையின் தலைவனே சரி பார்த்த கதையான கந்த புராணம் தலைசிறந்த ஒன்று.

கச்சியப்ப சிவாசாரியார் இதனை மிகுந்த சிரமத்தின் மத்தியில் அரங்கேற்றினார். புலவர் பலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த போதும் முருகன் அருளால்முரண்பாடு நீக்கி அவனருட் சிறப்பை அவனியில் திகழச் செய்தார்.

கச்சியப்பரின் கவிநயத்திற்கு ஒரு செய்யுளை ஈண்டு நோக்குவாம்.

''அருவமும் உருவு
மாகி அனாதியாய்ப்பல
வாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற
சோதிப்பிழம்பதோர்
மேனியாகி
கருணைகூர் முகங்
களாறும்
கரங்கள் பன்னிரண்
டுங் கொண்டே
ஒருதிரு முருகன்
வந்தாங் குதித்தனன்
உலகமுய்ய''

இதில் கச்சியப்பர் சொல்வண்ணத்தைக் கையாண்டிருக்கும்முறை உள்ளுந்தோறும் உவகை

(4 ஆம் பக்கம் பார்க்க)

---



**பொய்யாமொழி**

**குறள்:**

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

**பொருள்:**

(மக்களுடைய குணங்களாகிய) பெருமைக்கும் [illegible] சிறுமைக்கும் தேர்ந்தறியும் உரைகல்லாக இருப்பவை அவ[illegible]களே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

### கம்பனுக்கு விழாவெடுத்துக் கவின் தமிழ் வளர்ப்போர் வாழி!

பொம்பரும் ஹெலியுமிங்கே
பொழிந்திடும் குண்டுக்கஞ்சி
நம்மவர் பல பேரின்றி
நாட்டை விட்டோடும் நேரம்!
தம்பிமார் தமையே யீந்து
தாயகம் மீட்கும் வேளை
கம்பனின் விழாவெடுத்துக்
கவின் தமிழ் வளர்ப்போர் வாழி!

கம்பனின் பெருமையென்ன
கவிதையின் பொருள்களென்ன
நம்மவர் நிலைகளென்ன
நாட்டெதிர் காலமென்ன
இம்பர்கள் இடர்களென்ன
இவை நீங்க வழிகளென்ன
கம்பனின் விழாவில் விடையை
கண்டிடத் திரண்டு வாரீர்!

**க. பொ. நடனசிகாமணி**

(அகில இலங்கைக் கம்பன் கழகக் கம்பன் விழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது அதையொட்டி இக்கவிதை பிரசுரமாகின்றது.)

---

**வித்தாரம்**

முரளியார் வரவேணும்! என்ன புதினங்கள், சமாச்சாரங்கள் கொண்டு வந்திருக்கிறீர்?

வடமராட்சிப் பக்கத்தாலை இருந்து புதினங்கள் வாறது இப்ப குறைவாய் இருக்குது. சனம் இருந்தால் எல்லோ புதினம் வாறதுக்கு எண்டு சொல்லுறாய். ஏன்? இராணுவமார் இருக்கினம் தானே. அவையள் எத்தினை புதினங்களை உருவாக்க வல்லவர்கள்.

அது சரி மந்திகை ஆஸ்பத்திரியிலை வேலை செய்ய வந்த பிரெஞ்சு டாக்குத்தர்மார் அங்கை [illegible] ட கினமோ எண்டது சரியாய்த் தெரியவில்லை.

நெல்லியடித் தாக்குதலுக்குமுன்னமே இரண்டு மூண்டு பேர் போய் விட்டினமாம். ஒரு ஆள் அதாவது மயக்க மருந்து குடுக்கிறவர் மட்டும் தான் நிண்டவராம். அவர் கொழும்புக்குப் போனது போகாதது தெரியாது.

இப்பதான் ஞாபகம் வருகுது. போன புதன் கிழமை அதுதான் 15ஆந் திகதி — பிரெஞ்சுக் குடியரசுதினம் புரட்சிக்கும் உலக சரித்திரத்திலை தனி இடம் உண்டு எண்டது சரித்திரம் படிச்சவைக்குத் தெரியும் அது ஒரு முன்னோடியாக இருந்தது எண்டு கூடச் சொல்லலாம்.

அந்தக் காலத்திலை மன்னன் ஆட்சி. பதினாலாம் லூயி மன்னன் பெரியகொடுங்கோலன். எண்டாலும் ஸ்ரீலங்கா கொடுங்கோல் ஆட்சிக்கு அவன் நிகரானவனோ எண்டதை அரசியல் சரித்திர வல்லுநர்கள் கூட்டுச் சேர்ந்துதான் எடை போட வேணும்.

லூயி மன்னனின் பட்டத்து ராணி ஒருமுறை, மக்கள் பாண் இல்லாமல் பட்டினியாய் இருக்கிறார்கள் எண்டு முறையிட்டபோது, பாண் இல்லாட்டால் கேக் சாப்பிடச் சொல்லலாமே எண்டுவாய்க் கொழுப்பாய்க் கூறினாராம்.

அந்தக் கொடுங்கோல் லூயி மன்னனின் அடக்கு முறைக்கு விடிவு குடுத்த பிரெஞ்சுப் புரட்சி மலர்ந்த நாள்தான் பிரெஞ்சுக் குடியரசு தினமாகக் கொண்டாடப்படுகுது.

ஆனால் இப்ப பிரான்ஸும் ஏகாதிபத்தியக் குழாமில் தான் நிக்குது. எண்டாலும் வடமராட்சி ஊழிக்கூத்தாலை பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடிய மக்களுக்கு உதவ வந்த பிரெஞ்சு டாக்குத்தர்களின் பணிபாராட்டத்தக்கது.

★ ★ ★

நீ இலங்கை வானொலி, இல்லை இல்லை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின்ரை செய்தி அறிக்கையளை ஒழுங்காக கேக்கிறனீரோ? அவை சில வேளை மர்மமான செய்தியள் எல்லாம் சொல்லுவினம்?

முந்தநாள் ஒரு செய்தி சொல்லிச்சினம் கேட்டியே. யாழ்ப்பாணம் கோட்டையில உள்ள இராணுவச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானார் எண்டு சொல்லிப்போட்டு...

தீவிரவாதியள் ஒளிச்சிருந்து சுட்டதாகச் சொன்னவை, அவர் காயமடைஞ்சாரா அல்லது எமலோகத்துக்குப் போனாரோ எண்டுசொல்லையில்லை!

★ ★ ★

இந்திய அமைச்சரவையில் அங்கம் வகிச்ச மூத்த அரசியல் வாதிகளின் ஒருவரான சாஹிட் என்பவரும் இராஜினாமாச் செய்து விட்டார்.

அவர் இராஜினாமாச் செய்தது செய்ததுதான். ஸ்ரீலங்கா ரூபவாஹினி அந்தச் செய்திக்குப் பொடிவைச்சு அறிவிச்

(4 ஆம் பக்கம் பார்க்க

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

# உதயன்

17-07-1987 வெள்ளிக்கிழமை

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

இராணுவ நடவடிக்கையால்

## கரணவாயில் உயிரிழந்தோர்

வடமராட்சி, ஜூலை 17

கரணவாய் வடக்கில் கடந்த திங்களன்று இராணுவ நடவடிக்கையின் போது உயிரிழந்தவர் சிலரின் பிரேதங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் அந்தந்த இடங்களிலேயே எரிக்கப்பட்டன.

உயிரிழந்தோரில் அடையாளம் காணப்பட்டவர்களின் பெயர்கள் வருமாறு:-

சி. தெய்வானை (வயது 50) மு வீரன் (வயது70) க. சுந்தரி (வயது 50) எஸ். இராசையா (வயது 54) சி.செல்லர்(வயது65) அ. ஆழ்வார் (வயது60) எஸ். தாமு (வயது 35- சித்தசுவாதீன முற்றவர்) பரமர், வயது 70 (கல்லுவம்) (உ-எ-160)

## 10 பேர் பலி!

புதுடில்லி, ஜூலை 17

திரிபுர மாநிலத்தில் பத்துப் பேர் தீவிரவாதிகளினால் கொல்லப்பட்டனர்.

புதன் இரவு சந்தை ஒன்றுக்குள் புகுந்த தீவிரவாதிகள் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். (உ:எ)

## தேர்தலில்---

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

தல்களும் எமது நாட்டில் இணைபிரியாதவை. தேர்தல் நடத்தப்பட்டால் அதன் கருத்து நாடு சரியாக இருக்கின்றது என்ற அர்த்தம் அல்ல

மலைநாட்டில் லட்சக்கணக்கான மக்களின் வாக்குரிமை, பிரசா உரிமை மறுக்கப்பட்டிருந்த நேரத்தில் இந்த நாட்டில் தேர்தல்கள் நடத்தப்பட்டு வந்தனவே!

(முற்றும்)

## வித்தாரம்...


(3ஆம் பக்க தொடர்ச்சி)

சதுதான் பெரிய செய்தி.

இந்து — முஸ்லிம் கலவரங்களை அடக்கக்கூடிய சக்தி ராஜீவுக்கு இல்லை எண்டு சொல்லித்தான் சாஹிட் இராஜினுமாச் செய்ததாய் அது பெரிசு படுத்தியது.

இஞ்சை அரசாங்கமே தமிழரைக் கொல்லுது. அங்கை சனம் தங்களுக்குள்ளை அடிபடுகுதுகள்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தான் கொல்லுறதை நிப்பாட்டயில்லை; அங்கை சனம் அடிபடுறதை அரசாங்கம் நிப்பாட்டயில்லை என்பதைக் கிண்டல் பண்ணுறது போலை அந்தப் 'பொடி' இருந்திது.



## கந்த புராண -

(3-ம பக்கத்தொடர்ச்சி)

யளிப்பதாகும். முன்பு இல்லாத ஒரு பொருள் தான் தோன்ற முடியும்.

ஆகவே முருகன் என்றுமுள்ளவன். அவன் சிவனருளால் இந்த உலக முய்ய உதித்தவன் என்கிறார்.

சூரியன் மாலை மறைந்து மறுநாட்காலை உதயமாகின்றது. அதே போல முருகன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். என்றுமே உள்ள ஒன்று எப்படிப் புதிதாய்த் தோன்ற முடியும்?

அவன், கருணை கூரும் ஆறுமுகங்களுடன் — பன்னிரு கரத்துடன் — வந்து உதித்தான் என்கிறார். என்னே கச்சியப்பரின் சொல்லழகு.

இப்படி கந்த புராணத்தில் எத்தனையோ செய்யுள்கள் படிக்குந்தோறும் இன்பம் பயப்பவையாய்த் திகழ்கின்றன. இத்தகைய பெருமை வாய்ந்த சரிதை நாயகனை சரி பார்த்த கதையாம் கந்த புராணத்தைத் தந்த கச்சியப்பர் காசினியில் தெய்வமாக வைத்துப் போற்றி வணங்க வேண்டிய ஒருவராகும்.

கந்தன் கதை பாடிய கச்சியப்பர் அவனருளாலே உயர்வு பெற்று முத்தி பெற்றார். அவர் பாடிய கந்த புராணம் இன்றும் சைவ ஆலயங்களிலே படனம் செய்யப் படுகின்றது.

கந்த புராண படன கைங்கரியம் ஒன்றே இன்றைய கால கட்டத்தில் நாம் கச்சியப்பருக்குச் செய்யும் கைமாறாகும்.

## ஜி. பிக்கு வயது 75

புதுடில்லி, ஜூலை 17

இந்தியாவின் முதிர்ந்த ராஜதந்திரி திரு. ஜி. பார்த்தசாரதி கடந்த ஏழாம் திகதி தனது 75 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.

பிரதமர் ராஜீவ் காந்தி வாழ்த்துக் கடிதம் ஒன்றை திரு பார்த்தசாரதிக்கு அனுப்பிவைத்தார்.

திரு. பார்த்தசாரதி பத்திரிகையாளர், கல்வி மானுகவும் விளங்கினார். வெளிநாட்டு கொள்கை வகுப்பு ஆலோசனைக் குழுத் தலைவராக பணி புரிந்து ஓய்வு பெற்றார்.

## நவிண்டிலில் உயிர்ப்பலி, கொள்ளை

வடமராட்சி, ஜூலை 17

நவிண்டில், புட்டிமுலை என்னுமிடத்தில் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது உயிர்ப்பலி, கொள்ளை முதலியன இடம் பெற்றன என்று கூறப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க் கிழமை மாலை ஐந்து மணியளவில் நவிண்டில் ஊடாக வந்த இராணுவத்தினர் கண்ணில் தென்பட்டவர்களை எல்லாம் கண்மூடித்தனமாக வெட்டியும் சுட்டுக்கொண்டும் சென்றனர்.

புட்டிமுலை என்னும் இடத்துக்கு வந்த படையினர் சிங்கர் திருநாமம் என்பவரின் வீட்டுக்குள் நுழைந்தனர்.

வீட்டில் இருந்த திருநாவுக்கரசு, கண்டர், பொன்னம்மா, குஞ்சு, செல்லப்பா ஆகிய ஐவரும் துடிதுடிக்க வெட்டப்பட்டனர். பின்னர் சுடப்பட்டனர்.

அவர்கள் பின்னர் கிணற்றுக்குள் தூக்கிப் போடப்பட்டனர்.

அதே வீட்டில் இருந்த திருமதி திருநாவுக்கரசு சின்னம்மா (வயது 65) மயக்கம் அடைந்த நிலையில் இருந்தார். அவரின் மடியில் இருந்த ரொக்கப் பணம் அபகரிக்கப்பட்டது.

அவரின் ஒரு காதில் உள்ள தோடு கழற்றப் பட்டது.

மற்றைய காதில் உள்ள தோட்டைக் கழற்ற முடியாத நிலை ஏற்பட்டதால் காதையும் சேர்த்துத் தோட்டுடன் வெட்டி எடுத்துச் சென்றனர்.

இப்பெண் எப்படியோ தென்மராட்சிக்கு வந்து சேர்ந்து சிகிச்சை பெறுகின்றார். (உ-எ-160)

## வேலைநிறுத்தம் செய்த சுமார் 1,000 டாக்டர்கள் வேலை நீக்கம்

கொழும்பு, ஜூலை 17

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள சுமார் ஆயிரம் டாக்டர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்

— இப்படி அரசாங்கம் அறிவித்துள்ளது.

இத்தகவலை சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து நேற்று வெளியிட்டார்.

வைத்திய சேவைகள் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் அத்தியாவசிய சேவையாக்கப் பட்டுள்ளன.

இதையும் மீறி டாக்டர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது பாரதூரமான குற்றச் செயல்.

ஆகவே டாக்டர்கள் அனைவரும் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீண்டும் அரச சேவையில் சேருவதானால் புதியவர்களாகக் கருதியே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

— இப்படி அமைச்சர் சொன்னார்.

இதனிடையில் டாக்டர்களின் வேலைநிறுத்தம் நாடெங்கும் விஸ்தரிக்கப்பட இருப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (உ-எ)

## இந்திய உயர்---

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

இந்திரா காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்ட திரு. வெங்கட்ராமன் தற்போது உப ஜனாதிபதியாக பணி புரிகின்றார்.

சுயேச்சையாகப் போட்டியிட்ட மூன்றுவது வேட்பாளர் திரு. மிதிலேஷ்குமாருக்கு 2 ஆயிரத்து 223 வாக்குகள் கிடைத்தன.

வாக்குகள் எண்ணப்படுவது நேற்றுக் காலை 11.30 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத்தில் ஆரம்பமானது. ஆறரை மணித்தியாலங்களாக வாக்குகள் எண்ணப்பட்டன.

ஆங்கில அகர வரிசைப் படி, மாநில சட்டசபை உறுப்பினர்களினால் அளிக்கப்பட்ட வாக்குகளே முதலில் எண்ணப்பட்டன. பின்னரே நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகள் எண்ணப்பட்டன.

தேர்தல் முடிவை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் சுபாஷ் காஷ்யம் வெளியிட்டார்.

எதிர்க்கட்சி வேட்பாளர் கிருஷ்ண ஐயர் புதிய ஜனாதிபதியை வாழ்த்தி கடிதம் அனுப்பினார்.

''பாரதம் நமது தாயகம். இதுவே எம் இலட்சியமாக இருக்க வேண்டும்''—இப்படி திரு. கிருஷ்ண ஐயர் தனது கடிதத்தில் கூறியிருந்தார்.

பதவி விலகும் ஜனாதிபதி ஷெயில்சிங்கும் புதிய ஜனாதிபதியை வாழ்த்தி வரவேற்றிருக்கின்றார்.

ஜனாதிபதி ஷெயில்சிங்கின் பதவிக்காலம் எதிர்வரும் 24 ஆம் திகதி முடிவடைகின்றது. 25 ஆம் திகதி திரு. வெங்கட்ராமன் ஜனாதிபதியாகப் பதவி ஏற்பார். (உ-எ)

அமைதியை நிலைநாட்டினால்

# வன்செயல் பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்குவோம்

## உலக நாடுகள் முன் நிபந்தனை

கொழும்பு, ஜூலை 17

★ இலங்கையில் அமைதி நிலவச் செய்ய அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்குமாயின், அதற்கு விசேட நிதி உதவி கிடைக்கும்.

★ வன்செயல்களாலும், தாக்குதல்களாலும், ஏற்பட்ட சேதங்களைத் திருத்திப் புனர் நிர்மாணம் செய்வதற்கான நிவாரணமாக இந்த நிதி உதவி கிடைக்கும்.

★ விசேட நிதி உதவி கிடைத்தால் வன்செயல்களால், தாக்குதல்களால் ஏற்பட்ட உயிர், உடைமைச்சேதங்கள் பற்றிய விவரங்களைச் சேகரிக்க விசேஷ குழு ஒன்று நியமிக்கப்படும்.

இந்தத் தகவல்களை நிதி அமைச்சர் திரு ரொனி டி. மெல். நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

வன்செயல்கள், தாக்குதல்களால் ஏற்பட்ட சேதங்களை புனரமைக்க விசேஷ நிதி பெறுவதற்கு நாட்டில் பூரண அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்று உதவி வழங்கும் நாடுகள் முன் நிபந்தனை விதித்திருப்பதாகவும், அதனை விரைவில் நிறைவேற்றுவது அவசியம் எனத் தாம் கருதுவதாகவும் நிதி அமைச்சர் சொன்னார்.

ஸ்ரீலங்காவிற்கு வெளிநாட்டு உதவிகள் கிடைப்பதை தமிழர் மட்டும் எதிர்த்துப் பிரசாரம் நடத்தவில்லை; சிங்களவர் சிலரும் எதிர்த்து உலகநாடுகள் பலவற்றில் பிரசாரம் செய்திருக்கின்றனர் என்றும் அவர் சொன்னார்.

குமார் ரூபசிங்காவும், செனவிரத்னவும் இலங்கைக்கு எதிராகப் பிரசாரம் செய்திருக்காவிடில் எமக்கு இப்போது கிடைத்ததை விட இரண்டு மடங்கு உதவி கிடைத்திருக்கும் என்றும் திரு. ரொனி டிமெல் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் சொன்னதாவது;

இம்முறை ஆயிரத்து எண்ணூற்று அறுபது கோடி ரூபா நிதி உதவி கிடைத்துள்ளது.

தற்போது கிடைத்துள்ள நிதி உதவியில் 40 சதவீதம்நன்கொடையாகக் கிடைத்திருக்கின்றது எஞ்சிய தொகை குறைந்த வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்.

நன்கொடையாகக் கிடைத்த நிதியில் 75 சதவீதம் அபிவிருத்திக்குச் செலவிடப்படும். எஞ்சியது விவசாய அபிவிருத்திக்குச் செலவிடப்படும்.

—இப்படி அமைச்சர் ரொனி டிமெல் தெரிவித்தார். (உ-எ)

## ஹாட்லி கல்லூரி மாணவர்களுக்கான அனுமதிப் பத்திரம்

பலாலி, ஜூலை 17

ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் கல்வித் திணைக்கள வளவில் உள்ள சன்மார்க்கசாதன பாடசாலையில் வைத்து வழங்கப்படவுள்ளது.

வடமராட்சி மாணவர்கள் பலர் அங்கிருந்து இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களின் வசதி கருதியே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அதிபர் திரு. பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

மாணவர்கள் நேரில் தமது அடையாள அட்டையுடன் குறிப்பிட்ட தினத்தில் சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (உ-119)

## இராணுவத்தை - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற உணவுப் பொட்டலங்களை அனுப்பினுல் போதாது. உணவு அனுப்பியதற்கு பாராட்டுத் தெரிவிக்கலாம். ஆனால் அதே நேரத்தில் ஈழத்தில் அனுதினமும் செத்துக்கொண்டிருக்கும் தமிழர்களைக் காப்பாற்ற மத்திய அரசு இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்ற தீர்மானத்தை கொண்டுவந்தனர். (உ-ஐ)

## அந்தோ - -

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இராணுவ நடவடிக்கைகளினல் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து நிவாரணம் வழங்குவதற்கென யாழ். அரச அதிபரும் இலங்கை, இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் நேற்று வடமராட்சிக்குச் சென்றனர்.

அங்கு பல பகுதிகளில் பொதுமக்கள் எவரையும் அவர்கள் காணவில்லையாம்.

நெல்லியடிப் பகுதியில் மட்டும் பட்டினியல் வாடிய சிலருக்கு நேற்று செஞ்சிலுவைச் சங்கத்தினர் அரிசி, மா, சீனி போன்றவற்றை வழங்கினர். (உ-10)

## புலிகள் மீட்டனர்

யாழ்ப்பாணம், ஜூலை17

திருநெல்வேலியில் வைத்து இனந்தெரியாத சிலரால் இயக்கப் பாணியில் கடத்திச் செல்லப்பட்ட ஒருவரை தமிழீழ விடுதலைப் புலிகள்நேற்று மீட்டெடுத்தனர்.

சம்பந்தப்பட்டவர்களும் விடுதலைப் புலிகளினால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இக் கடத்தலுக்கு பாவிக்கப்பட்ட வாகனம் ஒன்றையும் தாம் மீட்டு எடுத்திருப்பதாக புலிகள் அறிவித்துள்ளனர். (உ-10)

## நவீன இந்தியாவை கட்டி எழுப்ப உறுதி

புதுடில்லி, ஜூலை 17

பரஸ்பர நம்பிக்கை, விசுவாசத்தின் அடிப்படையில் நவீன இந்தியாவைக் கட்டி எழுப்புவோம்.

-இப்படி புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட திரு. ஆர். வெங்கட்ராமன் தெரிவித்தார்.

இந்திய வானொலியின் செய்திச் சுருளுக்கு அளித்த முதல் பேட்டியில் திரு. வெங்கட்ராமன் இப்படித் தெரிவித்தார்.

பெரும் பொறுப்பு எனக்கு வந்துள்ளது. அரசியல் சாசனத்துக்கு மதிப்பளித்துநடப்பேன். ஜனாதிபதி பதவியின் மரபுகளை பாதுகாத்து எனது பணி அமையும்.

-இப்படி திரு. வெங்கட்ராமன் சொன்னார். (உ-எ)

## சீ பிளேன் நோட்டம்

குருநகர், ஜூலை 17

நேற்றுக் காலை 8-30 மணியளவில் யாழ். நகரின் மீதாக வலம்வந்த சீ பிளேன் ஒன்று சில இடங்களைப் படமெடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

பலாலி முகாமில் இருந்து நகருக்கு வந்த குறித்த விமானம் கரையோரப் பகுதிகளை வளைந்து நோட்டம் விட்டுப் படங்களும் எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-ரி)

## ராஜீவ் வாழ்த்து

புதுடில்லி, ஜூலை 17

புதிய ஜனாதிபதி திரு. வெங்கட்ராமனை பிரதமர் ராஜீவ்காந்தி, அவரின் வாசஸ்தலத்துக்குச் சென்று வாழ்த்தினார்.

பல அமைச்சர்களும் நேரில் சென்று புதிய ஜனாதிபதியை வாழ்த்தினர். (உ எ)


# பிரயாண ஒழுங்குகள்

HORIZON ENTERPRISES




★ குவைத்
★ சவூதி
★ டுபாய்
★ மாலைதீவு

ஆகிய நாடுகளுக்கான வேலைவாய்ப்புடன் செல்ல விரும்புவோர் எம்மிடம் லேபரர், கிளீனர் முதல் நிர்வாகப் பொறுப்பாளர் வரை அனைத்து வேலை வாய்ப்புடனும் மிக அதிகளவிலான வெற்றிடங்கள் உள்ளமையால் உடன்தொடர்பு கொள்ளவும்.

ஏற்கனவே வெளிநாட்டில் டிறைவிங் வேலை செய்தவர்களுக்கு குவைத் நாட்டிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

முக்கிய குறிப்பு:-

வடமராட்சி, பளை, செம்பியன்பற்றுப் பகுதிவாழ் மக்களின் வசதி கருதி எமது முதற் கிளைக் காரியாலயம் R. குணரத்தினராசா, கண்டி வீதி, கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கு எதிரில் அமைந்துள்ளது என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். மற்றும் எம்மிடம் கடவுச்சீட்டும் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவுவிலையில் கிடைக்கும். உங்கள் கடவுச்சீட்டு (PASS PORT) குறித்த தவணையில் செய்துதரப்படும்.

★ கடிதமூலம் தொடர்புகொள்ள விரும்புவோர் முத்திரையுடன்கூடிய மேல் விலாசமிடப்பட்ட கடித உறையுடன் தொடர்புகொள்ளவும்.

A. பத்மதாஸ்

இல. 97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.


## நீத்தார் பட்டியல்

### ஏ. ரி. கந்தையா

காரைநகர் அலெலன் வீதியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் அருணுசலம் தோமஸ் கந்தையா காலமானார்.

இவர் ஞானம்மாவின் அன்புக் கணவரும், சுசீலா, சகுந்தலா, வசந்தா, கருணைரஞ்சன், ஞானரஞ்சன் ஆகியோரின் தகப்பனாரும், பத்மசீலன், மகேஸ்வரன், தேவசகாயம், அரியவதனு ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு காரைநகரில் இடம்பெறும்.

— தகவல்: என். பத்மசீலன் (3221)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 17-07-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road Jaffna on Friday July 17, 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org